பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 08 2024 6 30

செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் பொதுமக்கள் உற்சாகத்துடன் பங்கேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. விபத்து மற்றும் மாசு இல்லா பட்டாசுகளை தயாரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் 24 ஆயிரத்து 700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 15 புதிய தொழில் திட்டங்களுக்கு மாநில அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.
4. கோவை, நீலகிரி மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியவின் அங்கிதா ரெய்னா முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் பொதுமக்கள் உற்சாகத்துடன் பங்கேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அருணாச்சல பிரதேசத்தில் நடைபெற்ற ஹர்-கர் திரங்கா விழிப்புணர்வு யாத்திரையில் ஏராளமாக மக்கள் பங்கேற்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்மாநில மக்களின் மனதில் தேசப்பற்று ஆழமாக பதித்திருப்பதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

விபத்தில்லா, மாசு இல்லா பட்டாசுகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் இன்று பட்டாசு தொழில் பாதுகாப்பு குறித்து பட்டாசு உற்பத்தியாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், பட்டாசு தொழிலில் புதிய சிந்தனைகளை புகுத்த வேண்டுமென்று வலியுறுத்தினார்.

பட்டாசு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத்தர தாம் முயற்சி மேற்கொள்ளப் போவதாகவும் திரு சுரேஷ் கோபி தெரிவித்தார்.

முன்னதாக அவர் பட்டாசு ஆலைகளை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசுகையில், தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு பட்டாசு உற்பத்தியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் 24 ஆயிரத்து 700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 44 ஆயிரத்து 125 கோடி ரூபாய் முதலீட்டுக்கான 15 புதிய தொழில் திட்டங்களுக்கு மாநில அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்ற 16-வது அமைச்சரவைக் கூட்டத்தில், ஆட்டோ மொபைல்ஸ், எலெக்ரானிக்ஸ், உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உதிரி பாகங்கள் மற்றும் மின்கல உற்பத்தித் துறைகளில் இந்த முதலீட்டு திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நீரேற்று சிறு புனல் மின் திட்டங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களுக்கான புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கைக்கும் மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

2030-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தின் மின் கட்டமைப்பில் 50 சதவீத பசுமை மின் உற்பத்தி என்ற இலக்கை அடைவதற்கு இந்த கொள்கைகள் வழிவகை செய்யும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மாநில மின்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, அரசு, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - தங்கம் தென்னரசு ) -54--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நுண்ணீர் பாசன அமைப்பு விரும்புபவர்கள் 50 சதவீத மானியத்தில் மின் மோட்டார் பம்ப் செட்டுகளை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்று மாநில வேளாண்மை பொறியியல் துறை அறிவித்துள்ளது.

ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளும், ஐந்து ஏக்கர் நிலம் வரை உள்ள அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பயன்பெறலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஏழை எளிய மற்றும் நலிவுற்ற பிரிவினருக்காக சேவையாற்றிய தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் மாநில அரசின் வைக்கம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசின் தலைமை செயலர் திரு சிவதாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்ந்தெடுக்கப்படும் தனி நபர் மற்றும் அமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் பதக்கம் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

இதற்காக இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் மாநில அரசின் பொதுத்துறை செயலருக்கு விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றுவோம் இயக்கத்தை வலுப்படுத்துவம் வகையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இதில் ஏராளமான பள்ளி மாணவர்கள் தேசியக் கொடியை ஏந்தி பேரணியில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் / சுரேகா ) -35--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் தலைவராக திரு எஸ் கே பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக ஆளுநரின் உத்தரவின் பேரில் மாநில அரசு இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

திரு எஸ் கே பிரபாகர் தற்போது மாநில அரசின் வருவாய்த்துறை ஆணையராக பணியாற்றி வருகிறார்.

**[]<<<>>>[]**

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக அணையிலிருந்து வினாடிக்கு 16 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதல் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சபரிஷ் ) --32-- செகண்ட்*

தேனி மாவட்டம், சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை எட்டியதை அடுத்து, அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதையடுத்து, வராக நதி கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஆங்காங்கே மிக கனமழை பெய்யக்கூடும் என்றும், தேனி திண்டுக்கல், ஈரோடு, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இடைநின்ற பள்ளி மாணவர்கள் தொழிற்கல்வி பயில்வதற்கான சிறப்பு முகாம் ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ராணிப்பேட்டையில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் முதல்வர் திட்ட சிறப்பு முகாம்களை பார்வையிட்ட ஆட்சியர் திருமதி உமா, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

**[]<<<>>>[]**

சுதந்திர தினத்தை முன்னிட்டு திருச்சி விமான நிலையத்தில் ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சுதந்திர தினத்தையொட்டி திருவள்ளூர் ரயில் நிலையத்தில் பாதுகாப்புப் பணியில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டில் பள்ளி குழந்தைகள் தேசியக் கொடிபோல் உடை அணிந்து அணிவகுத்து நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை வரவேற்றனர்.

**[]<<<>>>[]**

புதுக்கோட்டை மாவட்டத்தில் துவரை சாகுபடி மேற்கொள்ள மானியம் பெற விரும்புவோர் தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலகத்தில் உழவர் செயலி மூலமாக முன்பதிவு செய்து பயன்பெறலாம் என அதன் இணை இயக்குநர் திரு ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஸ்பெயினில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியவின் அங்கிதா ரெய்னா முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-7, 7-6, 6-3 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **Amelia Rajecki**-ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற ஹாக்கி அணியின் இரண்டாவது குழுவினர் இன்று புதுதில்லி வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஏராளமான விளையாட்டு ரசிகர்களும், பொதுமக்களும் அவர்களை வரவேற்றனர். ஹாக்கி அணியின் முதல் குழுவினர் கடந்த சனிக்கிழமை புதுதில்லி வந்தனர்.